




# தினப்புயல்

PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06







மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 93

## கொவிட் பரவல் மீண்டும் அதிகரிப்பு

*இலங்கையில் கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி, நேற்றைய தினம் நாட்டில் மேலும் 184 கொவிட் தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அரசாங்க தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ளது.*

*இந்த தொற்றாளர்கள் அனைவரும் இலங்கையில் இருந்து அடையாளம் காணப்பட்டவர்கள் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 666,764 ஆக அதிகரித்துள்ளது.*

*இதேவேளை, மேலும் மூன்று கொவிட் மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி, இலங்கையில் பதிவான மொத்த கொவிட்-19 இறப்புகளின் எண்ணிக்கை 16,586 ஆக அதிகரித்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.*



## மலையக ரயில் சேவை குறித்த அறிவிப்பு

மலையக ரயில் சேவை நாளை (09) முதல் மீண்டும் வழமைக்கு திரும்பும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. சீரற்ற காலநிலையின் காரணமாக நாவலப்பிட்டி மற்றும் நானு ஓயா ரயில் நிலையங்களுக்கிடையில். இடம்பெற்ற மண்சரிவு. மண் மேடுகள் மற்றும் பாறைகள் விழுந்தமையினால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன. சீரமைப்பு பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை. மத்திய மலையகத்தின் மேற்கு சரிவுகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மஸ்கெலியா - சிவ னொளிபாத மலை நல்லதண்ணி வீதி. இன்று முதல் தற்காலிகமாக மூடப்படுவதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்துள்ளார். தேசிய கட்டிட ஆய்வு நிறுவன அதிகாரிகள். இந்த பாதையில் இடம்பெறும் மண் சரிவு குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்பிக்க வழிவகை செய்யும் வகையில். இந்த வீதியை தற்காலிகமாக மூட முடிவு செய்யப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியின் நானு ஓயா கிரிமெட்டிய வீதி. மண் சரிவினால் பாதிக்கப்பட்டிருப்பதால் இங்கு ஒரு வழி பாதை போக்குவரத்தே இடம்பெறுவதாக உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். *(அரசாங்க தகவல் திணைக்களம்)*

## நாட்டினுள் குரங்கம்மை பரிசோதனை இன்று முதல்...

*நாட்டில் குரங்கம்மை நோய் தொற்றுக்குள்ளானவர்கள் உள்ளனரா என்பதைக் கண்டறிய பரிசோதனைகள் ஆரம்பிக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கான பரிசோதனை கருவிகள் உலக சுகாதார நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மருத்துவ தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் கலாநிதி அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார். பொரளை மருத்துவ பரிசோதனை நிறுவனம் மற்றும் கண்டி பொது வைத்தியசாலைக்கு இன்று (08) உரிய பரிசோதனை கருவிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.*




## வரிசையில் நிற்கவேண்டாம் - எரிசக்தி அமைச்சர்

*தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம் அல்லது QR முறையின் கீழ் எரிபொருள் பெறுவதற்கான இரண்டாவது கோட்டா நேற்று முன்தினம் (07) நள்ளிரவு முதல் ஆரம்பிக்கப்பட்டது. இது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நள்ளிரவில் புதுப்பிக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார். இதன்படி, மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி உள்ளிட்ட அனைத்து வாகனங்களுக்கும் கடந்த வாரம் எரிபொருள் வழங்கப்பட்டதை போன்று எரிபொருள் வழங்கப்படும்.*

*போதியளவு எரிபொருள் இருப்பதனால் வரிசையில் நிற்காமல் எரிபொருளைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அமைச்சர் அறிவித்துள்ளார். இதேவேளை, QR அமைப்பின் கீழ் கடந்த வாரம் எரிபொருள் விநியோக திட்டம் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர ட்விட்டர் செய்தியில் தெரிவித்திருந்தார். இதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து தரப்பினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் தனது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.*

## இலங்கை அணியில் இருந்து மேலும் சிலர் தப்பியோட்டம்

பொதுநலவாய போட்டிகளில் பங்கேற்பதற்காக பிரித்தானியா சென்றுள்ள இலங்கை அணியின் 10 பேர் அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் அணியை விட்டு வெளியேறியுள்ளதாக AFP செய்தி சேவை தெரிவித்துள்ளது.

அவர்களில் 3 பேர் கடந்த சில நாட்களுக்கு முன்பு காணாமல் போயிருந்தனர். ஜூடோ வீரர் மற்றும் பயிற்சியாளரின் இருப்பிடத்தை பொலிசார் கண்டுபிடித்தாலும். அவர்களுக்கு 180 நாட்கள் விசா இருந்ததால் அவர்கள் கைது செய்யப்படவில்லை.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் நெருக்கடி நிலை காரணமாக வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர்கள் அணியில் இருந்து வெளியேறியிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.



# அதிக ஆராய்ச்சியாளர்களை உருவாக்க தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தனது பணியை ஆரம்பித்துள்ளது - உபவேந்தர் றமீஸ் அபூபக்கர் தெரிவிப்பு

*(நூருல் ஹுதா உமர்)*

பட்டப்பின் படிப்பின் மூலம் அதிக ஆராய்ச்சியாளர்களை உருவாக்க தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தனது பணியை ஆரம்பித்துள்ளதுடன் எதிர்காலத்தில் பல மைல்கற்களை அடையும் என்று இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ பீடத்தில் பட்டப்பின் படிப்பினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு ஞாயிறு (07) பல்கலைக்கழக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதி கலாநிதி சபீனா எம்.ஜி. ஹசன் மற்றும் பட்டப்பின் படிப்புகளுக்கான இணைத்தலைவர் பேராசிரியர் அப்துல் றவூப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

மேலும் அவர் உரையாற்றுகையில், இந்தியா உட்பட பல நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் ஆராய்ச்சியாளர்கள் குறைவாக உள்ளதை வெளிப்படுத்திய அவர், இலங்கையில் Master of Philosophy (Mphil) மற்றும் Doctor of Philosophy (PhD) போன்ற பட்டப்பின் படிப்பின் மூலம் அதிக ஆராய்ச்சியாளர்களை உருவாக்க தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தனது பணியை ஆரம்பித்துள்ளதுடன் எதிர்காலத்தில் பல மைல்கற்களை அடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் 25 வருட வரலாற்றில் முதன்முறையாக Master of Philosophy (Mphil) மற்றும் Doctor of Philosophy (PhD) படிப்புகளை ஆரம்பிப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு இதற்கான விரிவுரையாளர்களின் பங்களிப்பிற்கு உபவேந்தர் நன்றி தெரிவித்தார்.

முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடம் மற்றும் கலை மற்றும் கலாச்சார பீடங்கள் பல்கலைக்கழகத்தின் முன்னோடி பீடங்கள் என்றும் பல முயற்சிகளில் எப்போதும் முன்னோடியாக இருந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். Master of Philosophy (Mphil) மற்றும் Doctor of Philosophy (PhD) புதிய விண்ணப்பதாரர்களுடன் தனது அனுபவத்தையும், அறிவையும் பகிர்ந்து கொண்டதோடு அவரது உரை முழுவதும் ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

Master of Philosophy (Mphil) மற்றும் Doctor of Philosophy (PhD) என்பது ஆராய்ச்சி வாழ்க்கையின் ஆரம்பம் என்று புதிய விண்ணப்பதாரர்களுக்கு அவர் ஆலோசனை வழங்கினார். மேலும் வாழ்க்கையில் சாதிக்க இன்னும் நிறைய உள்ளன என்பதை வலியுறுத்தினார். உங்கள் பட்டப்பின் படிப்பின் ஆரம்பத்திலிருந்தே தொழில் கூட்டாண்மை மூலம் பயனடைவீர்கள். எதிர்கால வேலைகளை சமாளிப்பதற்கு தேவையான திறன்கள் மற்றும் அனுபவத்துடன் நீங்கள் பட்டம் பெறுவது உறுதி செய்வதற்கு எங்கள் படிப்புகள் கைகூடும் என்றும் தெரிவித்தார்.

பட்டப்பின் படிப்புகளில் நான்கு முக்கிய வகைகள் உள்ளன. கற்பிக்கப்படும் படிப்புக்கள், ஆராய்ச்சி பட்டங்கள், மாற்றுப் படிப்புகள் மற்றும் தொழில்முறை தகுதிகள் உள்ளன. ஆகவே விண்ணப்பிக்கும் மற்றும் படிக்கும் படிப்புகள் வகை உங்கள் தொழில் நலன்களைப் பொறுத்தது எனவும் தெரிவித்தார். முதுகலைப் படிப்பின் பல நன்மைகள் உள்ளன, என்னைப் பொறுத்தவரை ஒரு தனிப்பட்ட சாதனையாகும். மேலும் தற்போது அறிவைக் கட்டியெழுப்பவும் எனது அறிவுசார் ஆர்வங்களை விரிவுபடுத்தவும் ஒரு வழியாகும் என தெரிவித்தார்.

எதிர்கால தொழில்வாய்ப்புகளை மேம்படுத்தும் நீங்கள் நிச்சயமற்றதாக உணர்ந்தால், ஆசிரியர் மற்றும் வேலைவாய்ப்பு சேவைகள் எப்போதும் ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுக்காக இருக்கும்மெனவும், உங்கள் கனவுகளைத் துரத்தவும் கடினமாக உழைக்கவும் உங்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லையென்று உபவேந்தர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் சிறப்பு பேச்சாளராக இந்தியாவின் கேரளா கொச்சி பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ நிறுவனத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி கே.எஸ். சந்திரசேகர் நவீன தொழில்நுட்பத்தினூடாக சிறப்புரையாற்றினார்.




# வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுவேண்டும்

(பாறுக் ஷிஹான்)

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 7ஆம் நாள் போராட்டம் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட 4 ஆம் கிராமத்தில் உள்ள மாவடி சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நேற்று (07) ஆரம்பமானது. பின்னர் ஊர்வலமாக சென்று பல்வேறு கோஷங்களுடன் மக்கள் தத்தமது உணர்வுகளை வெளிப்படுத்தி பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும் எனக் கோரி ஒன்று கூடி தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன் போது வடக்கு கிழக்கு மக்களிற்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும். நாங்கள் நாட்டை துண்டாடவோ தனி அரசோ கேட்கவில்லை இலங்கை நாட்டிற்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வினை கேட்கின்றோம். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும். 13 ஆவது திருத்த சட்டமானது அரசியல் அமைப்பு ரீதியாக அதிகார பரவலாக்கத்திற்கான உரிமையை உறுதிப்படுத்துகின்றது. போன்ற கோஷங்களை எழுப்பினர்.

இப் போராட்டத்தில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், செயற்பாட்டாளர் என 200இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அத்துடன் அடுத்தக்கட்ட போராட்டமானது அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, திருக்கோவில் உள்ளிட்ட பல இடங்களில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய வானிலை முன்னறிவிப்பு

*மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

*மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.*

*நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.*

*புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.*

*புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.*

*எனவே புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள்.*

*(வளிமண்டலவியல் திணைக்களம்)*